இளங்கோர் வாசகம்

[ஐந்தாம் புத்தகம்—ஐந்தாம் படிவம்]

[அரசியலார் முடிவாக வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி அமைக்கப் பெற்றது]

சிறப்பு

ஆசிரியர் :

B. முருகன், M.A.,
துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்,

135, பவழக்காரத் தெரு சென்னை - 1

முதற் பதிப்பு: நவம்பர், 1951
மறு பதிப்புகள்: ஜூன், 1952; மே, 1953; ஜூன், 1954; ஜூன், 1955.

Approved by the Madras Text Book Coommittee for class use Vide Fort St. George Gazette Supplement to Part I-B., page 79 of Cansolidated list dated 19—5—1954.

சாந்தி பிரஸ், சென்னை - 1.

அடக்கம்

செய்யுட் பகுதி

சிறப்பு

எண்		பக்கம்
1.	மணிமேகலை	1
2.	கம்பராமாயணம்	3
3.	பல்வகைப் பாடல்கள்	9

உரைநடைப் பகுதி

சிறப்பு

1.	பாரதியார் தமிழ்ப் புலமை திரு. நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்.,	12
2.	*செல்வத்தின் பொறுப்புகள் திரு. ஜே. ஸி. குமரப்பா	16
3.	மின்னலும் இடியும் திரு. வித்துவான் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம்.ஏ., பி.எல்., எம். ஓ. எல்.	20
4	†சோழன் கரிகாலன் திரு. புலவர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை	24
5.	ஐக்கிய நாடுகளின் கழகம் திரு. ப. முருகன், எம்.ஏ.	30
6.	பழந்தமிழ் உரைநடை	33

---

* ஆனந்த விகடன் தீபாவளி இதழிலிருந்து ஆசிரியர் இசைவுடன் தொகுக்கப் பெற்றது.

† வாலாஜாபாத் இந்துமத பாடசாலையாரின் 'குருகுலம்' என்னும் இதழிலிருந்து ஆசிரியர் இசைவுடன் வெளியிடப் பெற்றது.

ஏனைய பாடங்கள் ஆசிரியர்களின் இசைவு பெற்றுத் தொகுக்கப் பெற்றன.

செய்யுட் பகுதி

சிறப்பு

1. மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை

சாதுவன் நாகர்களின் ஆசிரியனுக்குக் கொலையும் புலையும் தவிர்க்க என அறவுரை பகர்தல்

மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
மயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்
கண்டனை யாகெனக் கடுநகை எய்தி
உடம்புவிட் டோடும் உயிருருக் கொண்டோர்
இடம்புகும் என்றே எமக்கீங் குரைத்தாய்
அவ்வுயிர் எவ்வணம் போய்ப்புகும் அவ்வகை
செவ்வனம் உரையெனச் சினவா திதுகேள்.

உடலுக்குள் உயிர் இருப்பதைச் சாதுவன் விளக்கிக் காட்டல்

உற்றதை உணரும் உடலுயிர் வாழ்வுழி
மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடில்
தடிந்தெரி ஊட்டினுந் தானுண ராதெனின்
உடம்பிடைப் போனதொன் றுண்டென உணர்நீ
போனார் தமக்கோர் புக்கிலுண் டென்பது
யானோ வல்லேன் யாவரும் உணர்குவர்
உடம்பீண் டொழிய உயிர்பல காவதம்
கடந்துசேண் சேறல் கனவினுங் காண்குவை
ஆங்ஙனம் போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளிநீ.

கொலையும் புலையும் தவிராமல் தான் செய்யக்கூடிய அறம் யாதென, சாதுவன் அறிவுறுத்தல்

என்றவன் உரைத்தலும் எரிவிழி நாகனும்
நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு
உள்ளுறை வாழுயிர் ஓம்புதல் ஆற்றேன்
தமக்கொழி மரபின் சாவுறு காறும்
எமக்கா நல்லறம் எடுத்துரை யென்றலும்
நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்றனக் கொல்லும் நெறியறம் உறைக்கேன்
உடைகல மாக்கள் உயிருய்ந் தீங்குறின்
அடுதொழில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகெனச் சிறுமகன் உரைப்போன்
ஈங்கெமக் காகும் இவ்வறம் செய்கேம்
ஆங்குனக் காகும் அறம்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்கிவை
விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவையிவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்தன் என்னும் வணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துடன் ஏறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்
ஆங்ஙனம் ஆகிய ஆதிரை கையால்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்
தொழுதுவலங் கொண்டு துயரறு கிளவியோ
டமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்.

—சீத்தலைச் சாத்தனார்

2. கம்ப ராமாயணம்

குகப் படலம்

பரதனும் சேனையும் கங்கைக் கரையை யடைதல்

பூவிரி பொலன்கழற் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான். 1

பரதன் சேனையைக் கண்டு குகன் ஐயுறுதல்

அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை எய்த்ததென் றெடுத்த சீற்றத்தான். 2

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழி புகுந்த போலவே. 3

குகன் சேனையை நோக்கிக் கூறுதல்

தோன்றின புளிஞரை நோக்கிச் 'சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேற்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதிரா' வென்றான். 4

'அஞ்சன வண்ணனென் னாருயிர்
நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ்சர மென்பன தீயுமிழ்
கின்றன செல்லாவோ!
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குக
னென்றெனை யோதாரோ? 5

' ஆழ நெடுந்திரை யாறு
கடந்திவர் போவாரோ !
வேழ நெடும்படை கண்டு
விலக்கிடும் வில்லாளோ !
தோழமை யென்றவர் சொல்லிய
சொல்லொரு சொல்லன்றோ !
ஏழமை வேட னிறந்தில
னென்றெனை யேசாரோ !

' முன்னவ னென்று நினைந்திலன்
மொய்புலி யன்னானோர்
பின்னவன் நின்றன னென்றில
னன்னவை பேசானேல்
என்னித னென்னை யிகழ்ந்ததிவ்
வெல்லை கடந்தன்றோ !
மன்னவர் நெஞ்சினில் வேடர்
விடும்சரம் வாயாவோ !

ஆடு கொடிப்படை சாடி
யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு
மிப்புகழ் மேவீரோ !
நாடு கொடுத்தவென் னையக
னுக்கிவர் நாமாளுங்
காடு கொடுக்கில ராகி
யெடுத்தது காணீரோ !

' மாமுனி வர்க்குற வாகி
வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று
மனத்திறை கொள்ளாதே
ஏழுனை யுற்றிடி லேழு
கடற்படை யென்றாலும்
ஆழுனை யிற்சிறு கூழென
விப்பொழு தாகாதோ !

'என்பன சொல்லி யிரும்பன
மேனிய ரேனோர்முன்
வன்பனை வில்லினன் மல்லுயர்
தோளினன் வாள்வீரர்க்
கன்பனு நின்றனன் நின்றது
கண்டரி யேறன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன்
மூரிய தேர்வல்லான். 10

சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றிக் கூறுதல்

'கங்கையிரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்
குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான்
விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க்
குகனென்னுங் குறியுடையான்'. 11

'கற்காணுந் திண்மையான்
கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய
வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள்
மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா
னெறியெதிர்நின் றனனெ'ன்றான். 12

பரதனைக் கண்டு குகன் ஆராய்தல்

வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானை
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான். 13

நம்பியு மென்னாயகனை
யொக்கின்றா னயல்நின்றான்
தம்பியையு மொக்கின்றான்
தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை
திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா
ரிழைப்பரோ பிழைப்பென்றான். 14

பரதனும் குகனும் சந்தித்தல்

வந்தெதிரே தொழுதானை
வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு
மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத்
தழுவினான் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான். 15

இராமனை யழைத்துச் செல்ல வந்தேன் என்று பரதன் கூறல்

தழுவின புளிஞர் வேந்தன்
தாமரைச் செங்க ணானை
'எழுவினு முயர்ந்த தோளா
யெய்திய தென்னை' என்ன
'முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
மன்னனைக் கொணர்வான்' என்றான். 16

குகன் பரதனைப் புகழ்தல்

'தாயுரை கொண்டு தாதை
யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து
புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே
ழாவரோ தெரியி னம்மா!' 17

'என்புகழ் கின்ற தேஎழ
யெயினனேனென் இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண்
மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்
உயர்குணத் துரவுத் தோளாய்!' 18

இராமன் துயில்கொண்ட இடத்தைக் கண்டு பரதன் துயருறுதல்

காரெனக் கடிது சென்றான்
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான். 19

'இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயு
மமிர்தென அரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி
துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ்
செல்வமுங் கொள்வென் யானே'. 20

பரதன் இலக்குமணனைக் குறித்துக் கேட்டல்

தூண்டர நிவந்த தோளான்
பின்னருஞ் சொல்லு வான்'அந்
நீண்டவன் துயின்ற சூழ
லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் தொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்ததி
யாண்டு'என இனிது கேட்டான்
எயினர்கோ னிதனைச் சொன்னான். 21

குகன் கூற்று

'அல்லையாண் டமைந்த மேனி
யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றான்
இமைப்பில னயனம்' என்றான். 22

பரதன் தன்னை வெறுத்தல்

என்பத்தைக் கேட்ட மைந்தன்
'இராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில்
யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானேன்;
அவனது துடைக்க நின்றான்;
அன்பத்துக் கெல்லை யுண்டோ ?
அழகிதென் னடிமை' என்றான். 23

அவ்விடை யண்ணல் தானு
மன்றரும் பொடியின் வைகித்
'தெவ்விடை தரநின் றார்க்குஞ்
செறிகழற் புளிஞர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றி
னேற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி
வேந்தன்பால் விடுத்தது' என்றான். 24

கங்கையைக் கடத்தல்

குரிசில தேவ லாலக்
குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வாழாமை நோக்கி
மரபுளி வகையி னேற்றக்
கரிபரி யிரதங் காலாள்
கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங்
கங்கையா றேறிற் றன்றே 25

—கம்பர்

3. பல்வகைப் பாடல்கள்

1. சீட்டுக்கவி

ஏட்டாயிரங் கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை

சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குல சேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டு காண்க ;

பாடாத கந்தருவம், எறியாத கந்துகம,
பற்றிக் கொலாத கோணம்,
பறவாத கொக்கு, அனற்பண்ணாத கோடை, வெம்
படையில் தொடாத குந்தம்,

சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்து முடியாத சடிலம்,
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவூர விடல் வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

2. நாய்க்கும் தேங்காய்க்கும் சிலேடை

ஓடும் இருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமெனச் செப்பு.

3. பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது—விஞ்சு மலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

4. வறுமையின் கொடுமை

இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்?
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலம தாகு மமுதினைக் கொள்வோம்
யாரெனை யுலகினி லொப்பார்?
சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்திர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினுற் குபேர னுக்கினு னவனே
மாசிலா வீசனு வானே.

—காளமேகப் புலவர்

5. எழுத்துப் பெருக்கம்

சோலையைஓரெழுத்தால்என்சொல்லும்?தொக்கதன்மேல்
நீலப்பேர் எவ்வெழுத்தி னுல்நிரம்பும்?—மாலைக்
குடைவேந்தன் சென்னி குளிர்நதியின் பேரைக்
கடை சேர்ந்த ஓரெழுத்தால் காண்.

6. எழுத்துச் சுருக்கம்

ஆற்றின்பேர் ஈற்றின் எழுத்தொழிய இன்பஞ்சேர்
நாற்கால தாமீற் றுயிர்நடப்ப—ஏற்புடைய
உண்பயனும் ஆங்கதனி னீரெழுந்தால் ஓதுநூற்
கின்பஞ்சேர் செய்யுளாம் இன்று.

7. நற்பண்புகள்

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனம்நன் னிலம்.

— தனிப்பாடல்

8. புதுமைப் பெண்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம் ;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ! 1

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;
சவுரி யங்கள் பலபல செய்வராம்;
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்;
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;
ஏத்தி யாடவர் போற்றிட வாழ்வராம் ;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ. 2

— பாரதியார்

9. வாழ்த்து

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெலாம் செழித்தோங்கி வளர வேண்டும்
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தி னேனே.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

உரை நடைப் பகுதி

சிறப்பு

1. பாரதியார் தமிழ்ப் புலமை

திரு. நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள்

சமீபத்தில் காலஞ்சென்ற சிவசுப்பிரமணிய பாரதியார்தன் னிகரில்லாத் தமிழ்ப்புலவர் நமக்குநெருங்கியகாலத்தவராகவே அவர் கவிநலத்தின் உயர்வை உள்ளபடி அளந்தறிவது அருமை யாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடுநிலையின்றி இவர் இயல் புகளைக் கடையிறந்து காண்பாராவர். நம் கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு நவீன ஆதர்சத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, நம்மிடையே பாடும் நம் காலப் புலவர் ஒருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ் வாரும் வெறுத்து மிகப் பழிப்பவரும் பலராவர். ஆனால் இத் தகைய புலவரின் கவிகளை, கவிநலம் அறிவதன்றி வேறு நோக் கங் கொள்ளாது, தம் உணர்வைக் கவரவிடாது படிப்பதும், படித்து அவற்றின் இயல்பை அளந்தறிவதும் மிகச் சிலர்க்கே யாவதாகும். நடுமை நல்லறிவாளர், பாரதியாரது கவித்திறம் அறிந்து கூறும் நய உரைகள் காணும்வரை, மற்றவர் இப்புல வர் கவிதை நலம் காண முயல்வது தவறென்பது தகாதன்றோ? ஆனவரை இத்தமிழ்ப் புலவர் கவி நலத்தை ஆராய்வோம்.

முதலில் தற்காலத் தமிழ்ப் புலவர் கட்டுப்பாட்டுக்குப் பாரதியார் பெரும்பாலும் இணங்காதவர். நாக பந்தங்களும், ஏகத்தாள் இகழ் அகல் யமக அந்தாதிகளும், புலமைத் தலைக் கோலாக் கருதும் பாவலரிடையில், சித்திரகவிச் சத்துருவான பாரதியார் பாக்கள் மதிக்கப்படுவது அருமையேயாகும். மனோ பாவ அருமையோடு பொருளும் வறண்ட தற்காலத்திலே, புலமை வனம் அழகொடு மணம் செயுமலர்களேனும், கொழு விய தண்சுவைக் கனிகளேனும் தரமாட்டாது: அடர்ந்திருண்டு காழ்த்து மலிந்த இலைச் செடிகளாலும் புதர்களாலுமே நிறைந்து தோன்றுவது இயல்பாகும். தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழை மாலைகளே பெரும்பாலும்

தொடுக்கப்படுகின்றன. அழகு மணம் முதலிய இயற்கை நலம் இல்லாததாகவே, தழைகளை வினைத்திறம் மலியப் பலவாறு தொடுத்து, அடுக்காலும் தொடையாலும் பல்வேறுபட்ட இலைமாலைகளையே பலரும் முடைகின்றனர் இவ்வனத்திடையே தளரா ஊக்கம் உடையான் ஒரு புலவன், வெறுஞ் செடி களைந்து, மனம் திருத்தி, உணர்ச்சி நீர் வார்த்து, புலமைக் கதிர் ஊட்டி வளர்த்த நல்ல தமிழ்ப் பூந்தோட்டத்தில், நறு மலரும் சுவைக்கனியும் காணப்பெற்றால், அஃது அந்த வனத்தின் இயல்புக்குப் பொருத்தமற்ற அபூத விளைவாகவே தோன்றும். பாரதியார் பாக்கள் இப்படிப்பட்ட இலை வனத்திடை எழுந்த கனி மலர்த் தோப்பாம்.

இவர் பாக்கள், கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பண்டைப் பாவலர் தெளிவான நடை பயின்று, இளகி ஒளிரும் வெண்பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையன. இப்புலவரது நூல்களைப் படிப்பவருக்கு நிகண்டு அகராதிகள் வேண்டா; கள்ளமற்ற உள்ளமும், ஊன்றிய கவனமும், தமிழில் ஆர்வமும் உடையாருக்கு இப்புலவர் இதயம் பரந்தவெளியான இடத்தில் உள்ள மலையாம். எளிய இனிய இவர் கவிநடை நீரொழுக்கு உடையதேனும், வயிரத்தின் திண்மையும் ஒளியும் பெற்று நிற்கும்.

(1) " நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு."

(2) " மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி இருந்தேன்
மூலைக் கடலினை அவ்வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன் "

இனைய உருகுபொன் ஒழுக்குடைய ஒப்பற்ற இனிய அடிகளைப் படிக்குந்தோறும் நாவும், கேட்குந்தோறும் செவியும் இனிக்கும்.

அலங்காரங்களுக் கெல்லாம் தாயான உவமையைக் கையாளுவதில் இப்புலவர் பண்டைப் பாவலர் பலர்க்கும் இளையாதவர்; இக்காலத்தில் இணையற்றவர். வருந்தித் தேடிப்பொருந்தச் செய்யும் புலவர் பெருமுயற்சியை நன்றி மறவாது சுமந்து

காட்டும் பல புலவர் அணிகளைப் போலன்றி, பாரதியாரின் உவமைகள், இயற்கையினின்று இவர் வாக்கைத் தேடி வந்தடையும். கருத்துக்குப் பொருத்தம் உடைமையோடு, கேட்போர் மனத்தில் பதிந்து மறையாது உறையும் செவ்வி உடையவாம் தன் இவர் உவமை அனைத்தும். இயற்கையினின்று எளிதிலெடுத்து, கவிதை அமுதருத்தி இவராளும் உவமைகள், இப் புலவர் கற்பனைத்திறனையும், ஒப்புணர் தேர்ச்சியையும், கவிவனைகைவினை முதிர்ச்சியையும், அநாயாச ஆட்சியையும் இனிது காட்டும். பழம் பாட்டுக்களைத் துருவி, பண்டை உவமைகளை உருவி, தம் புலமை நிறுவக் கருவியாக்கும் இழிசெயலை அறவே வெறுத்தவர் இப்புலவர்.

"தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வையம் முழுதுமில்லை தோழீ"

"கண்ணன் முகமறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்துபயன் உண்டோ?"

என வரும் பல உவமைகளையுங் காண்க. உவமான உவமேய இயைபுகளும், அவைகளின் அழகும், கவிகளில் இவற்றின் அமைப்பும் விசதமாக எடுத்து விரிப்பதானால், இவற்றிற்கே பல வியாசங்கள் வேண்டும். கேவலம் பண்புகளையும் மனோபாவ எண்ணங்களையுமே உருவகப்படுத்தி, அவற்றின் உதவி கொண்டு, தம் கோள் நிறுவுதலில் இவர் கைவந்த சமர்த்தர்.

இவரைக் குற்றமற்ற மதுரகவி என்னலாம். இவர் சித்திர கவிக்கு மித்திரரில்லை. பண்டை முறைப்படி விஸ்தாரப்படுத்தி யாதொரு நூலுஞ் செய்ய இவர் விரும்பினதாய்த் தெரியவில்லை. வெளிவந்த 'பாஞ்சாலி சபதம்' ஒத்த சில சிறு காவியங்களையும் அச்சேருத 'சேற்றூர் உலா' அன்ன சில ஒருதுறைக் காதற் பனுவல்களையும் இவர் செய்ததுண்டு. இவர் இயற்றிய ஒரு பொருள் நுதலிய பலதுறைக்கோவைகளில், 'கண்ணன் பாட்டும்,' 'சுதேச கீதங்களுமே' தலைநின்ற சிறப்புடையனவாம். கவிதொறுங் கனியும் தேனும், அடிதொறுங் கமழுங் கண்டும் தெவிட்டாத சுவை தருவனவாம்.

பண்டு தொட்டுப் பாவலர் நால்வகைப் பாவிலும் இயற்றியுள்ள பனுவல்கள் ஆயிரக் கணக்கானவை. திருத்தக்க தேவ

ரும், கம்பரும் விருத்தப்பாவை வீறுபெறச் செய்தது முதல், பிந்திய புலவரெல்லாம் பாக்களின் பண்பையும் பயனையும் அறவே மறந்து, விருத்தப்பா இனத்திற்கே அரசுரிமை தந்து வைத்தனர். விருத்தமல்லாப் பல துறைப் பாவினங்கொண் டெழுந்து, விழுமிய தனிப் பனுவலாகப் புலவர் போற்றுவது, தற்கால உலகில் கலிங்கத்துப் பரணி ஒன்றே. இந்நிலையில் தமிழகத்தெழுந்த நம் புலவர், தனிப்பாசுரங்களால் தலைநின்ற தம் கவித்திறத்தை எவ்வகைப் பாவினுங் காட்ட வல்லவராயி னும், தாம் தொகுத்த பனுவல்கள் பலவும் இசையோடு பாடத் தகும் பாவினப் பாட்டுக்களைக் கொண்டே செய்து அமைத்து வைத்தார். நமது கவியின் புதுக் கருத்துக்களுக்கும், நாடு மொழி மதங்களோடு குறுகாமல் மக்கள் நலத்தோடு விரிந்த விசால நோக்கத்துக்கும், உலக முழுதும் பரந்து வந்து நமது நாட்டையும் இயக்கும் புதுக் கிளர்ச்சிக்கும் மிக்க பொருத்தம் உடையதாக, தம் கவி உள்ளம் கனிந்துருகி அலைத்தெழும் உணர்வு வெள்ளத்தை வழிப்படுத்தினர். தமிழ்ப் பெருமககளை ஊக்கி, அவர்க்கு ஆக்கம் தருவதற்கு இசைஇனிக்கப் பாடுவதே கடன் என்றறிந்த புலவர், அக்கருத்து மேற்கொண்டும், இப் புது வழிப் புகுத்து, தமிழருக்குப் புதிய உணர்ச்சியும் தமிழுக் குப் புதுப் புத்தணிகளும் தேடித் தந்துள்ளார்.

எதுகை மோனைகளைத் தேடிப் பொருளிழந்து திண்டாடும் பாக்களால் புண்பட்ட தமிழ் மகள், தொட்டதெல்லாம் பொன் னுக்கும் இவர் பாவன்மை வேதுபெற்று, ஆறுதலும் மகிழ்வும் அடைவாள். பாப்பாப் பாட்டு, முரசுக கவிகளால் மிழன்று, பள்ளும், கிளிப் பாட்டும் பயின்று, விடுதலை, தாய்நாடு பாடி, பாஞ்சாலி சபதம் கூறி, கண்ணன் பாட்டு, ஜீவன் முக்திகளில் வீறிய இவர் கவிதை நலம், பண்ணேறி விண்ணுயர்ந்து உலவு வதாகும். சமயம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றுள் சம திருஷ்டியும், அனுதாப நிறைவும், இவர் பாத்தொறும் பரவி விரவும். எனைத்தானும் தற்காலத் தமிழுலகில் இவரொத்தா ரைக் காண்பதரிது; மிக்கார் இலராவர்.

2. செல்வத்தின் பொறுப்புகள்

திரு. ஜே. ஸி. குமரப்பா அவர்கள்

குணச் செல்வம், கல்விச் செல்வம், பொருட் செல்வம் என செல்வ மென்பது பலவகைப்படும். இவைகளின் இலட்சணங் களும் வெவ்வேறு வகைப்பட்டவைகளாக இருக்கும். பொருட் செல்வத்தின் பல அம்சங்களையே இங்கு ஆராய்வோம்.

முதலாளித்துவத்தின் பொருளுற்பத்தி முறையினுல் தூண் டப்பட்டு நாம் செல்வத்தை அதனுடைய பொருள் பெறும் சக்தியைக் கொண்டே மதிப்பிடக் கற்றேம். ஒருவரிடம் பண மிருந்து, அதைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பண்டம் ஒன்றை அவர் வாங்கிக் கொண்டால், அத்துடன் அவ்வேலை முடிந்து விடுகிறது. " உங்களுடைய பணத்துக்குப் பெறுமான பண்டம் வாங்கிக் கொண்டாகிவிட்டது!" என்று சொல்லப் படுகிறது. மனிதர்களும் மிருகங்களாக இருந்து, ஆத்மா என்ற ஒன்று அவர்களுக்கு இல்லாவிட்டால், உண்மையில் விஷயம் இத்துடன் முடிந்துவிடும். "மனச் சாட்சி", "பாவப் பணம்", "பொறுப்பு" போன்ற பேச்சே இராது.

அதிருஷ்ட வசமாய் நாமெல்லோரும் அவ்விதம் பொருளே முக்கியமென்று கருதும் மனப்பான்மையுடைவர்க ளல்லர். நம் மில் அநேகர் பொறுப்பு, கடமை முதலியவற்றைப் பற்றிச் சிறிது சிறிதாகிலும் அறிவார்கள். மனச் சாட்சி என்பது—அது அநேகமாய்த் தூங்கும் மனச் சாட்சியாக இருப்பினும்—நமக்கு ஒன்று இருக்கிறது. ஆகையால் மனிதருக்கு ஆத்ம முன்னேற்ற மும் நல்லொழுக்க மேன்மையும் அவசியமென்பதை உணரு கிறேம். இவ்விதம் இருப்பதனுல் பொருள் கொண்டு நாம் வாழும் வாழ்க்கையைக் கேவலம் பொருளாசை வாழ்க்கையாக இல்லாமல், ஒரு மேன்மையான புண்ணிய வாழ்க்கையாகச் செய்ய இயலும்.

ஒரு பொருளின் பெறுமானத்தைப் பல திட்டங்களைக் கொண்டு மதிப்பிடலாம்.

(1) பாத்திரக் கடையில் ஒரு செம்பின் எடையை நிறுத்து வாங்கும்போது நாம் அப்பண்டத்தின் பித்தளை, செய் கூலி முதலியவைகளை மாத்திரமே மதிப்பிட்டு வாங்குகிறேம். இது பண்ட மதிப்பு.

(2) சில பொருள்கள், அவைகளின் விலையை உத்தேசித்து மாத்திரமன்று; அவைகளைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள அபிமானம், பற்றுதல் முதலியவைகளைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றன. மிக அருமையான தாயாரோ தகப்பனாரோ உபயோகித்து வந்த ஒரு நாற்காலியின் மதிப்பைக் கேவலம் அதன் விலையைக் கொண்டு மட்டும் நாம் நிச்சயிக்க மாட்டோம். இஃது அன்பின் மதிப்பு எனலாம்.

(3) ஒரு குழந்தையின் கழுத்தில் போட்டிருந்த தங்கச் சங்கிலியை அக்குழந்தையின் கழுத்தை முறித்துக் கொன்றுவிட்டு ஒருவன் எடுத்து வந்து விற்றானால் இவ் விவரங்களை அறிந்த எவரும் அதை வாங்க முன்வரமாட்டார்கள். இச் சமயம் அதன் விலையைப் பற்றிய கேள்வியே எழாது. இது நமது நியாய - அநியாய மென்னும் பகுத்தறிவினால் ஏற்படும் வெறுப்பு. இதைத் தர்ம மதிப்பு எனலாம்.

(4) காந்திஜியைப் போன்ற ஒருவர், பட்டாடை அணியும் சக்தி பெற்றிருந்தும், தமது நாட்டின் பெரும்பான்மையோரின் நிலையைத் தாமும் பகிர்ந்துகொள்ள விரும்பி, தடிப்பான கதர்த் துண்டைக் கட்டிக்கொண்டால், அந்தத் தியாகம் ஆன்ம மேன்மையினால் ஏற்படுவது. இதை ஆத்மிக மதிப்பு எனலாம்.

இந்த நான்கு உதாரணங்களிலும், செய்யப்படும் செய்கை அந்த அந்தப் பண்ட மதிப்பு, அன்பு மதிப்பு, தர்ம மதிப்பு, ஆத்மிக மதிப்பு ஆகிய குணங்களைக் காட்டுவதுடன் அவரவர்களின் மதிப்பிடும் சக்தியையும் எடுத்துக் காட்டும்.

செல்வம் சேர்க்கும் விஷயத்தில் மக்களுக்குத் தீங்குண்டாகும் வகையில் ஒருவர் செல்வம் சேர்த்தால், அது பாவப் பணம் என்று சொல்லப்படும். நாம் அத்துடன் நின்றுகொள்கிறோம். ஒரு வக்கீலோ, டாக்டரோ தமது கட்சிக்காரனுக்கும் நோயாளிக்கும் எது நலம் என்பதைப் பாராமல், தான் அவர்களிடம் எவ்விதம் அதிகப் பணம் சுரண்டலாம் என்றே யோசித்துக் காரியங்களைச் செய்தால் நாம் அவ்வளவாகக் குற்றம் சொல்வதில்லை. வியாபார விஷயத்திலோ நாம் ஒன்றுமே விசாரிப்பதில்லை.

செல்வத்தைச் செலவழிக்கும் விஷயத்தில், பணத்தைக் கொடுத்து ஒரு பண்டத்தை வாங்கும் சமயம் ஓர் உயர்ந்த மதிப்பு வேண்டுமென்று எவரும் கருதுவதே இல்லை. தினசரித் தேவை

களை வாங்கும்பொழுதுகூட நமது கடமை ஒன்று இருக்கிறதென்று எவரும் கருதுவதில்லை, குழந்தையின் கழுத்துச் சங்கிலியுடன் கொலை பாதகமும் சேர்ந்திருப்பதுபோல் கடையில் வாங்கும் ஒவ்வொரு பண்டத்தினிடம் நல்லதோ, கெட்டதோ ஒரு குணம் சேர்ந்திருக்கிறது. விற்கின்றவன் தனது பண்டத்துடன் தனது கர்மத்தின் பலனையும்—அது நல்லதோ, தீதோ—விற்றுவிடுகிறான். ஆகையால் நாம் வாங்கும் பண்டத்தின் வரலாற்றை நாம் அறிய வேண்டும்.

இஃது ஒரு பெரிய பொறுப்பு: தினமும் பண்டங்கள் வாங்கும் சமயம் நம்மில் எவ்வளவு பேர்கள் தங்கள் பொறுப்பை உணருகிறார்கள் ? கஞ்சிக்கும் போதாத கூலியைக் கொடுத்துச் செய்யப்படும் பொருளை நாம் வாங்கினேமென்றால், அப்பொருளுடன் பட்டினி கிடக்கச் செய்த பாவத்தையும் நாம் வாங்கிக் கொள்கிறோம். இது முதலில் மிகக் கொடூர எண்ணமாகத் தோன்றும். ஆனால் சற்று நிதானமாக யோசிப்போம். இயந்திரத்தில் ஒரு பண்டம் செய்யப்பட்டதென்றால் நாளடைவில் இயந்திரம் தேய்வடைவதால் அந்த இயந்திரத்தின் விலை, அதைப் பழுது பார்க்கும் செலவு, அதை வேலை செய்யச் செய்யும் செலவு ஆகிய யாவும் சேர்த்து அவற்றால் உண்டாக்கப்படும் பண்டங்களின் விலையுடன் கூட்டி வசூலிக்கப்படும்.

மனிதன் ஓர் இயந்திரமே. ஒரு குயவன் பானைகள் செய்தால், அப்பானைகளின் விலையானது அக்குயவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் ஜீவனோபாயத்திற்குப் போதுமானதாக இருக்கவேண்டும். ஜீவனோபாயமென்பது அவன் கேவலம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கச் சக்தி அளிப்பது மாத்திர மன்று. அவன் தனது வேலையைச் சரிவரச் செய்யும் சக்தியளிப்பதாக இருக்கவேண்டும். இல்லாவிடில், மலிவாக விற்கப்படும் பானைகளுடன் அவனுடைய தேக சக்தி குறைவடைவதும் அதில் சேரும். மலிவாகப் பானை வாங்குகிறவர்கள் அவனுடைய சக்தியையும் எடுத்துக் கொள்கிறவர்களாவார்கள். செய் கூலி ஏற்றதாகக் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தினால் பண்டத்தின் விலை அதிகரிக்கிறதெனின் அது மிகவும் நல்லதே. அவ்வித அதிக விலையைக் கொடுப்பதற்குப் பண்டம் வாங்கும் செல்வர்கள் எவரும் தயங்கக் கூடாது.

ஒரு பண்டத்தின் உற்பத்தி விபரம் அறிந்து வாங்குவது தர்மமென்று ஏற்படுகிறது. மனித சக்தியின் விருத்தியை விரும்

பும் எவரும் இவ்விவரங்களை அறியாமல் பண்டங்களை வாங்கக் கூடாது. ஆனால் இவ்விதம் அறிய முயலுவது மிகவும் கடின மான வேலை. பிற தேசங்களிலிருந்து வரும் பண்டங்களை வாங் கும்போது இந்த வேலையைச் செய்ய இயலாது. ஆகையாலேயே நமது நாட்டில் செய்யப்படும் பண்டங்களையே வாங்குவது உசி தம். இதுவே, "சுதேசி" என்பதற்கு அடிப்படையான தர்மம்.

வியாபாரத்தில் போட்டிக்குப் பண்டங்கள் விற்கப்படும் சமயம் சுதேசிப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கும். உள் நாட்டுப் பண்டத்தை விட்டு, மலிவாக இருக்கும் அந்நிய நாட்டுப் பண்டத்தை நாம் வாங்கினோமென்றால், நாம் நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏழ்மையையுமே உண் டாக்கிக் கொள்கிறோம். ஏற்ற விலையைக் கொடுத்து, நமது நாட் டுப் பொருளை வாங்கி, நமது தேவைகளைத் திருப்தி செய்து கொள்ள இயலவில்லையெனின் பிறநாட்டுப் பொருளை வாங்கா மல், நமது தேவையைக் குறைத்துக் கொள்வதுதான் மேன்மை யான நடத்தை.

ஒரு பண்டத்தின் அழகும் உபயோகமும் எவ்வளவு இருப் பினும், நமது நியாயத் தன்மைக்கோ, தர்ம நெறிக்கோ இது ஏற்றதன்று என்று தோன்றினால் நாம் உடனே அதை வேண்டா மென்று ஒதுக்கவேண்டும். நமது மனச்சாட்சி பலம் பெற்றதாக இருப்பின், இவ்விதம் தேவையைக்கட்டுப்படுத்துவதுகஷ்டமாக இராது. சர்க்கரை வாங்கச் செல்லுகிறோம்; ஆலைகளில் தயா ரித்த வெளுப்புச் சர்க்கரைக் கட்டிகளும் அவற்றின் அருகில் நாட்டுக் கருப்பு வெல்லக் கட்டிகளும் இருந்தால், வெல்லம் மிக அழுக்கடைந்ததாக நமக்குத் தோன்றும். ஆனால் நமது மனச் சாட்சியின் கண் திறந்திருந்தால், நியாய அநியாயங்களின் பகுத் தறிவுச் சக்தி நமக்கிருந்தால், இந்த ஆலைச் சர்க்கரையே கையி னால் தொடுவதற்கும் அருகதையற்ற பண்டமென்பதை உணர் வோம். மனிதனின் புறத்திருந்து வரும் எதுவும் அவனை அழுக் குறச் செய்யாது; அவனது நெஞ்சத்திலிருந்தெழும் தீதே அவனை அழுக்குறச் செய்கிறது.

நம்மில் அநேகர் பண்டத்தின் விலையை மதிப்பிடுவதில் விழிப்புடையவர்களே. அதே விதம் ஒன்றின் தர்மத்தை, நியாய அநியாயத்தை மதிப்பிடுவதிலும் நாம் நிபுணர்களாக வேண்டும். வெல்லம் அழுக்காக இருந்தால் சுத்தம் செய்யலாம்; நமது ஆத் மாவை நாம் கெடுத்துக் கொள்ளலாமா?

நமது செய்கைகளினுல் பிறர் எவ்விதம் பாதிக்கப்படுகிருர்க ளென்பதை உணர்ந்து நம்மால் எவ்வளவு மேன்மையாக நடக்க இயலுமோ அவ்வளவு மேன்மையுடன் நடந்தோமானுல், நமது ஆத்மா மேன்மேலும் பரிசுத்தமடையும்.

3. மின்னலும் இடியும்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், எம். ஏ., பி. எல்., எம் ஓ எல், அவர்கள்

அம்மா, குழந்தாய்! இப்படி வா. அலாவுத்தீன் வைத்திருந்த விளக்கைத் தேய்த்தால் ஒரு பேய் வந்து இட்ட வேலே செய்யுமாம் என வாயைப் பிளக்கிருய்; அது கட்டுக் கதை. ஆனுல், இப்போதோ ஒன்று வந்துள்ளது. அதனைப் பேய் என்று சொல்ல வாய் வரவில்லே; தேவு எனலாம். அதனைக் கம்பியிலடைத்து ஊரெங்கும் வீடெங்கும் வேலே வாங்குகிருேம். வெயிலில் புழுக்கமாக இருக்கிறது. அதோ அந்தத் திருகைத் திருகு; என்ன காற்று! எவ்வளவு விரைவாக இந்த விசிறி சுற்றுகிறது பார்! இருட்டாய் விட்டது. இதோ இந்தக் கைத்தடியில் உள்ள குமிழை அழுத்து; கொள்ளிக்கட்டைப் பேய் போலத் திடீர் என எவ்வளவு தொலேவு வெளிச்சம் தெரிகிறது! வெந்நீர் வேண்டுமா? மின்கம்பியோடு இணைத்துள்ள இத்தக் கட்டையை அந்தத் தண்ணீர்ச் செம்பிலிடு; நீரிற் குமிழி பொங்குகிறது 'ஒன்று.........இரண்டு.........மூன்று......நூறு' என்று எண்ணுவதற்குள் நீர் சுட்டுவிட்டது. உன் விருப்பப்படி குடி. இப்படியே சமைக்கலாம்; துணியை வெள்ளாவியில் வைத்து உலர்த்தலாம்; சூட்டில் மடித்து வைக்கலாம். இது மாடுபோல வண்டி இழுத்துச் செல்வதைப் பார்த்ததில்லேயா? அவ் வண்டிதான் மின்வண்டி. மா அரைக்கவோ நீர் இறைக்கவோ வேண்டுமா? இந்தத் தேவு அத்தனையும் செய்யும். தொலேவில் இருப்பவர்களோடு பேச வேண்டுமா? ஒலி அலேயை மின் அலேயாக மாற்றி அனுப்பினுல், உன் பேச்சு உலகம் முழுவதும் கேட்கும். 'ரேடியோ' என்னும் வானெலியைக் கேட்ட தில்லேயா? என்ன வியப்பு! இத்தகைய தேவு உனக்கு வேண்டுவதெல்லாம் செய்து வருவதை நீ எண்ணிப் பார்த்தாயா? நமக்கே தெரியாமல் நமக்கு உதவும் தோன்ருத் துணேயாகும் இத்தேவு.

இதனைச் 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்று பாடலாம் அல்லவா?

ஈது என்ன! உலகத்துப் பொருள்களை யெல்லாம் வெட்டித் தகர்த்துக்கொண்டே போனால் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து முடியும். அந்த அணுக்கள் ஒரு பெரு வியப்பு. ஞாயிற்றைச் சுற்றிக் கோள்கள் சுழலுங் காட்சியை ஒவ்வோர் அணுவிலும் காணலாம். நடுவே ஞாயிறுபோல ஒன்று உண்டு. அதனைப் புரோடான் (Proton) என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றனர். அதனை நேர்மின்துளி எனலாம். அதனைச் சுற்றி ஒன்று இரண்டு மூன்று எனப் பல கோள்கள் சுற்றுகின்றன. அவ்ற்றை எலக்ட்ரான் (Electron) என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றனர். அவற்றை எதிர்மின்துளிகள் எனலாம். அந்த எதிர்மின்துளிகள் இயங்கிக்கொண்டே இருப்பனவாம். ஒரு பொருளில் அவ்விரு மின்துகள்களும் ஒரே எண்ணிக்கையில் அமைந்துள்ளன. அப்பொருளை வேறொரு பொருளோடுதேய்த்தோமானால், எப்போதும் இயங்கி ஓடும் எதிர்மின்துகள்கள் ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளில் போய் ஒற்றிக் கொள்ளும். அப்போது ஒரு பொருளில் எதிர்மின்துகள்கள் அளவுக்கு மேல் இருக்கும்; மற்றொரு பொருளில் அளவுக்குக் குறைந்திருக்கும். நேர்மின்துகள்கள் இருந்த இடத்தைவிட்டு நகராத சோம்பேறிகள். எதிர்மின்துகள்கள் குறைந்தபொருளில் நேர்மின் ஆற்றல் விளங்கும். ஒரே அளவில் இருந்தால் மின் ஆற்றல் விளங்குவதில்லை. ஒன்றில் ஒன்று மிகவேண்டும். பட்டுத் துண்டு ஒன்று எடுத்து அரக்கைக் கொண்டு விரைவாகத் தேய். பட்டிலிருந்து அரக்கிற்குத் துகள்கள் ஓடுகின்றன. இப்போது அரக்கின் மின்னாற்றலை வேண்டுமானால் காணலாம். சிறு பட்டு நூலிற் கடலை யளவுள்ள சிறிய நெட்டியைக் (Pith Ball) கட்டித்தொங்கவிட்டு அதனெதிர் அந்தஅரக்கைக்கொண்டு சென்றால் நெட்டிகுதித்து அப்புறம் ஓடுகிறது, என்னவேடிக்கை! எதிர்மின்னாற்றலுள்ள பொருள் தன்னோடு மாறுபட்ட நேர் மின்னாற்றலுள்ள பொருளைக் கட்டித் தழுவுமேயன்றித் தன்னைப் போன்ற எதிர் மின்னாற்றலுள்ள பொருளைத் தொடாது: பாம்பைக்கண்டவனைப் போலக் குதித்தோடும். எதிர்மின்னாற்றலுடைய பொருள் எதிர் எந்தப் பொருள் வந்தாலும், அது தன்னுடைய எதிர்மின்துகளைப் பங்கிட்டுக்கொண்டு விருந்தாளியோடு விருந்துண்ணுமாம். ஆகவே, எதிர் மின்னாற்றலுடைய

அரக்கின் முன் நெட்டி வந்தபோது நெட்டிக்கும் புதிதாக எதிர் மின்துகள் கிடைக்கின்றது. அதிலும் எதிர்மின்துகள் அளவுக்கு மிகும். மிகவே, அதுவும் எதிர் மின்னாற்றலோடு விளங்குகிறது. நொடிப்பொழுதில் நட்புப் போய்ப் பகையாய் மாறிவிடுகிறது. அரக்கு, நெட்டி இவை இரண்டும் எதிர்மின்னாற்றலோடு விளங்குவதால் ஒன்றையொன்று தொடாது எட்டிப் போய்விடுகின்றன. தொடுவதுதான் மின் இணக்கம் (Electrical Attraction); தொடாது குதிப்பது மின் பிணக்கம் (Electrical Repulsion) இப்போது குதித்தோடிய நெட்டியினது வேடிக்கையின் காரணம் விளங்கிற்றல்லவா? வீட்டில் இரண்டு கம்பிகள் ஓடுவதைக் கண்டிருப்பாய், தனித் தனியே இவ்விரண்டும் அவ்வாறு கம்பியில் விளங்குகின்றன. குமிழை அழுத்தியதும் இரண்டும் ஒன்றாய்த் தழுவி நிற்கின்றன. அப்போதுதான் மின்னாற்றலால் நிகழும் வியத்தகு செயல்களெல்லாம் நிகழ்கின்றன.

வீட்டில் சிறு விளக்கும் பெரு விளக்கும் பார்த்துள்ளாய். இவற்றிற்கெல்லாம் பெரிய விளக்கு ஒன்று திடீரென எரிவதைப் பார்த்திருக்கிறாயா? தண்ணீரில் விளக்கெரிந்த கதையொன்று உண்டு. ஆனால் அதை மழைக் காலத்தில் அடிக்கடி கண்கூடாகக் காண்கிறோம். மின்னலை அறியாதவர் யார்? அந்த அழகில் ஈடுபட்டு மின்னற்கொடி யென்றும் மின்னொளியாள் என்றும் பெயர் கொடுத்து அஞ்சா நெஞ்சினனாகிய அர்ச்சுனனுக்கு மணம் செய்து வைத்தனர் பழைய தமிழ் மக்கள்.

நீர் ஆவியாய் மேலே போகிறதும் சிறிது குளிர்ச்சிபட்டால் கீழ்நோக்கி நீர்த்துளியாய் விரைந்தோடி வருகிறதும், அடுப்பங்கரையில் கண்டிருக்கிறோம். வெட்ட வெளியில் சிறு சூடாய் ஈரத்தோடும் உலாவுங் காற்று வீசுகிறது. எதிரே வேறொரு காற்று வந்து தாக்கினாலோ ஏதேனும் ஒரு மலை முதலிய தடை ஏற்பட்டாலோ, ஒரு சுழற்சி உண்டாகிறது. சூடான காற்று மிக விரைவாக மேலெழுகிறது. ஆனால் அதில் ஈரமுள்ளமையால் இறுகி நீர்த் துளியாக வரும்போது மேலும் மேலும் கீழிருந்து காற்று மேலெழுந்து போய்க்கொண்டிருக்குமல்லவா? கீழ்நோக்கிய நீர்த்துளிகள், மேனோக்கும் காற்றோடு தாக்குண்டு சிதறிப்போகின்றன. அரக்கைப் பட்டுத் துண்டில் தேய்த்த போது மின்னாற்றல் விளங்கக் கண்டதுபோல இவ்வாறு பெரும் பொருள்கள் உராயும்போதும் மின்னாற்றல் எழுமன்றோ? மேலே எதிர் மின்னாற்றல் (-Vecharge) கீழே நேர்மின்னாற்றல், இடையே

இடைவெளி-இப்படி ஓர் அமைப்பு ஏற்படுகிறது. இடைவெளிக் காற்று மின்னாற்றலின் ஓட்டத்தைத் தடுக்கும். எதிர் மின்னாற்றலோ நேர் மின்னாற்றலைத் தழுவ ஓடி வருகிறது. இடைவெளியில் நெருக்கடி மிக மிக, இடைவெளியானது மேலும் தடுக்க வலியின்றி நெகிழ்கின்றது. மின்னோட்டம் மேலிருந்து கீழே பாய்கிறது. பாயும்போது இடைவெளி ஒரு படித்தாய் நெகிழ்வதில்லை. நெகிழுமிடம் பார்த்து மின்னோட்டம் பாய்கிறது. அதனால் ஆணிவேர் போல மேலே ஒன்றும் கீழ்நோக்கிய சல்லி வேர் போலப் பலவுமாகக் கொடிபோலச் சுடர்கள்பாயக் காண்கிறோம். இதனாலேதான் மின்னற் கொடி என்று புலவர்கள் பேசலானார்கள். சிலபோது காற்றோடு காற்றுத் தாக்குண்ணும் போது கீழே எதிர் மின்னாற்றலும் மேலே நேர் மின்னாற்றலும் மிகும்படி நேரிடலாம். அப்போது மின்னற்கொடி கீழிருந்து மேலே நோக்கி ஓடும். முருகப் பெருமான் கொன்ற சூரன் தலை கீழாக நின்ற மாமரத்தின் கதை உனக்குத் தெரியுமல்லவா? அதன் வேர் போலத் தோன்றும் இத்தகைய மின்னல். சிலபோது மின்னல் முகிற் கூட்டங்களுக்குப் பின்னே எழும். அவ்வொளி பின்புறத்தே தோன்ற, முன்னுள்ள முகிற் கூட்டம் முழுதும் சுடர் வடிவான குவளைக் காடுபோல ஒரே ஒளித்திரையாகப் பொலியக் காண்போம். அழுக்குப் படிந்த கண்ணாடியின் பின்னே 'படாசு' பளிச்சென மின்னி வெடிக்கும்போது கண்ணாடியின் முன்பிருந்து பார்த்தால் கண்ணாடி ஒளித்தட்டுப்போல விளங்குகின்ற வேடிக்கையைப் பார்த்திருக்கிறாயல்லவா? அது போன்ற வேடிக்கையாகும் இது. இந்த மின்னலும் சிலபோது மேலும் கீழும் ஓடாமல் அயலில் உள்ள முகிற் கூட்டத்தில் மின்னாற்றலுக் கேற்ப நெடுகக் குறுக்காகத் தாவித் தாவிப் பரந்து போகவும் காண்போம். மின்னலின் பல பல காட்சிகள் மிகமிக அழகாக விளங்குவதைக் கண்டு அவ்வழகில் ஈடுபட்டு, 'மின்னொளியாள்' எனத் தமிழர் களித்தனர். மின்னைக் கண்டுகண் கூசி, இடியொலி கேட்டு நடுநடுங்கிய வேறு சிலர், இந்திரனது அயிற்படையாகக் கண்டு விதிர் விதிர்த்தனர்.

இனி இடி என்பது என்ன? நேர்மின்னாற்றற் பொருளாய்க் கீழிருந்த காற்றும் எதிர் மின்னாற்றற் பொருளாய் மேலிருந்த காற்றும் ஒன்றாய்க் கலந்தபோது முன்னிருந்த இடத்தைவிடக் குறுகிய இடத்தில் நிற்பனவாம். அப்போது அவற்றினிடையே வேறு வெளியான இடம் எழும். சுற்றிலும் உள்ள காற்று மிக

விரைய 'விர்' என்று போய் அவ் வொளியிடத்தில் சேரும். தாக்குதலின் ஒலியும், இவ்வாறு போய்ச் சேரும் காற்றின் ஒலியுந்தான் இடியொலியாக எழுகின்றன. முகிற் கூட்டத்தின் முடுக்கில் எல்லாம் இந்த ஒலி மாறி மாறி எதிர் ஒலியாகத் தொடர்ந்து எழும்போது நீண்ட நேரம் 'கடகட' எனத் தொடர்ந்து, இடி இடிப்பதைக் கேட்கின்றோம். இதனை நீயும் இரவில் கேட்டு நடு நடுங்கி, நின் தாயை இறுக அணைத்துக்கொண்டு 'அாசுனு' என்று அவர்களோடு கதறியதுண்டோ?

4. சோழன் கரிகாலன்

திருவாளர் புலவர் ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

தமிழகத்தில் தமிழறிஞர்களில் சோழன் கரிகாலனைக் கேள்விப்படாதவர் ஒருவரும் இரார். காவிரியாற்றைக் காணும் போதெல்லாம் யாவருக்கும் கரிகாலன் பெயர் நினைவிற்கு வரும். இவனைக் கரிகால் வளவனென்றும், கரிகாற் பெருவளத்தான் என்றும் வழங்குவர் சான்றோர். இவனைப் பற்றிய வரலாறுகள் பல தமிழ்நாட்டில் வழங்குகின்றன சோழன் கரிகாலன் என்ற பெயரால் தனித்தனி உரைநூல்கள் இக்காலத்து அறிஞர்களால் எழுதப்பட்டும் உள்ளன.

சோழன்கரிகாலன் சங்கத்தொகை நூற்பாட்டுக்கள் தோன்றிய காலத்தவன். சோழ நாட்டையாண்ட பெரு வேந்தருள் ஒருவனாகிய இவன் அவ்வேந்தருள் முன்னோனுமாவான். இவன் தந்தை உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி யென்பவனாவன். இவன் தாய் இவனைக் கருவுயிர்க்கும்போது இளஞ்சேட்சென்னி இறந்தான். அதனால் இவன் பிறக்கும்போதே இவனுக்குச் சோழநாட்டு அரசுரிமை யுண்டாயிற்று. இளஞ் சேட்சென்னி இறந்ததும் சோழ நாட்டில் அரசியல் குழப்பமுண்டாயிற்று. அக்காலத்தில் முடிவேந்தரான பாண்டியரும் சேரரும் பிற குறுநில மன்னரும் சோழ வரசைப் பெற விழைந்து பொருதனர். இளஞ்சேட்சென்னியின் வழித்தோன்றலாகக் கரிகாலன் பிறந்த செய்தியைக் கேட்ட பகைவர், அவன் இருந்த பெரு வீட்டைத் தீக்கிரையாக்கினர். அக்காலத்தே, கரிகாலனுடைய தாய் மாமனை இரும்பிடர்த்தலையார் தாயும் சேயும் பகைவர் கைப்படா

வாறு தப்புவித்துக் கழுமலம் என்னுமிடத்துக்கொண்டு சென்று பாதுகாத்தார். தீப்பற்றிய வீட்டினின்றும் தப்பிச் செல்லுங் கால் கரிகாலன் காலில் நெருப்புப்பட்டுக் கரிந்துபோயிற்று. போகவே, கரிகாலன் என்ற பெயர் இயற்பெயராவதோடு காரணப் பெயருமாய் விளங்குவதாயிற்று.

சோழன் கரிகாலன் இரும்பிடர்த்தலையாரால் தீக்கிரையாகாவாறு காக்கப்பட்ட செயலை, "சுடப்பட்டுயிருய்ந்தசோழன் மகனும், பிடர்த்தலைப் பேராணைப் பெற்றே—கடைக்காற், செயிரறு செங்கோற்செலீ இயினன்" என்று பண்டையோர் பாடியுள்ளனர். 'மூன்றுலகத்தையும் ஆளப்பிறந்தவனாகிய கரிகாலன் காலில் நெருப்புற்றதனால், நிலவுலகத்தோடே நின்று போனான். என்ற கருத்துப்பட, பழம் பாட்டொன்று,

> "முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
> இச்சக கரமே யளந்ததால் - செய்ச்செய்
> அரிகான்மேற் றேன்றொடுக்கும் ஆய்புனல்நீர் நாடன்
> கரிகாலன் கால்நெருப் புற்று"

என்று கூறுகிறது.

கரிகாலனுக்கு அம்மானான இரும்பிடர்த் தலையார் நிலவரசுரிமை யில்லாதவராயினும் புலவரசு புரியும் செந்நாப் புலவராய்ச் சிறந்து விளங்கினார். பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியை ஒருகால் கண்டு,'வேந்தே, நிலம் பெயரினும் நின்சொல் பெயரற்க; நீ நின்பால் வரும் புலவர் முதலியோர் குறிப்புணர்ந்து வேண்டுவன நல்கும் வீறுபெற்றுள்ளாய்; ஆதலால் நின்பால் புலவரும்இரவலரும்வந்தவண்ணமிருப்பர்" என்று பாடிச் சிறப்பித்துள்ளார். இச்சான்றோர்பால் கரிகாலன் இளமை தொட்டே கல்விப் பயிற்சியும் அரசியற் பயிற்சியும் பெற்றுவந்தான்.

கரிகாலன் பெறற் குரிய பயிற்சி நிரம்பியும் இளமை தீரு முன்னே சோழநாட்டுக்கு வேந்தனாகும் பொறுப்புண்டாயிற்று. சோழநாட்டு அரசியற் கலக்கம் ஒருவாறு அமைதி பெற்றதும், அந்நாட்டுச் சான்றோர் சிலர் ஒன்றுகூடிச் சோழ வரசுக்குரிய தோன்றலொருவன் தோன்றியுளன் என்பது கேள்வியுற்றும் அவன் இருந்தவிடம்தெரியாமல், பெருங்களிறொன்றை ஒப்பனை செய்து அதன் கையில் மாலை தந்து அரசனாதற்குரிய தோன்றலைக் கொணருமாறு விடுத்தனர். மாலையொடு வந்த அந்த மால்

யானை கழுமலத்துக்கு வந்து அங்கே சிறுவர் கூட்டத்திடையே யிருந்த கரிகாலனுக்குத் தான் கொண்டுவந்த மாலையைச் சூட்டி வணங்கி நின்றது கரிகாலன் அதன்மேல் இவர்ந்தான். சான்றோரும் பிறரும் பேராரவாரத்தோடு அவனை வரவேற்றுச் சோழ வேந்தனுமாறு வேண்டினர். புலவர் புகழ, பாணர் பாட, சான்றோர் வாழ்த்த, நாட்டுமக்கள் நன்மொழி வழங்கக் கரிகாலன் அரசு கட்டிலேறினன்.

கரிகாலன் ஆட்சிபுரிந்து வருகையில் முதிய சான்றோர் கூடித் தம் முதுமையறிவுகொண்டு ஆராய்ந்து காணவேண்டிய வழக்கொன்று உண்டாயிற்று. வழக்காடுவோர் வேந்தனுக்குத் தம் வழக்கைத் தெரிவித்தனர். ஆயினும் அவர்கள் உள்ளத்தே கரிகாலனது இளமைச் செவ்வி யிருந்து தெளிவை உண்டு பண்ணவில்லை. அதனைக் குறிப்பால் உணர்ந்த கரிகாலன் முதுமை மிக்க சான்றோர் சிலரைத் தேர்ந்துகொள்ளப் பணித்து மறுநாள் அவர்களை ஒருங்கு கூடி முறைவழங்குமாறு மொழிந்தான. மறுநாள் கரிகாலன் தானும் ஒரு பழுத்த முதியோன் போல உருக்கொண்டு எவரும் எள்ளளவும் அயிராதபடி அம் முதியோர் கூட்டத்தே வந்திருந்தான். முதுமைச் சான்றோர் குழுவினர் தம்முள் மிக முதியனாய்த் தோன்றிய கரிகால முதியோனையே தலைவனாகக்கொண்டு வழக்கினையாராய்ந்தனர். முடிவில் கரிகால முதியோன் வழக்கின் உண்மையுணர்ந்து நேரிய முறையினைத் துணிந்து சொன்னன். வழக்காடியவர்களும், சான்றோர்களும் முறைமையின் நேர்மையும் உண்மை வழுவாமையும் கண்டு முதியோனைப் பாராட்டினர். சிறிது போதில் அவன் தன் முதுமைக் கோலத்தைக் களைந்து உண்மை வடிவில் காட்சியளித்தான். யாவரும் பெருவியப்புற்று அவனை வாழ்த்தினர். அவன் செயலைக்கண்ட சான்றோருட் சிலர், உண்மை யோர்தற்கு முதுமைக்கேயன்றி இளமைக்கும் உரிமையும் திறனும் உண்டென்றனர். சிலர் 'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' என்றனர். இச் செயலால், கரிகாலன் புகழ் தமிழகம் எங்கும் பரவிற்று. சில வேந்தர்கட்கு அழுக்காறு ஏதுவாகப் பகைமை யுணர்வு உண்டாகத் தொடங்கியது.

சோழன் கரிகாலன் ஆட்சி செய்து வருகையில் சோழ நாட்டில் அக்காலத்தே பெருகியிருந்த காடுகளையழித்து நாடாக்கினன். ஆங்காங்குக் குளங்கள் பலஎடுத்துப் பெருகிவரும் காவிரி நீரைத் தேக்கி நாட்டை வளப்படுத்தினன். குடிவளம் பெருக

பெருகக் காவிரிக்கு இருமருங்கும் கரையெடுத்துயர்த்திச் சிறு சிறு ஆறுகளாகப் பிரிந்தோடிய கால்களையும் செம்மை செய்தான். காவிரியாறு சோழ நாட்டுப் பகுதியில் வேனில் மிகுந்து வெம்மை செய்யுங் காலத்தில் மேலைக் கடற்கரையில் சுவர்போல் நிற்கும் மேற்கு மலைத்தொடரில் மழை பெய்யுமாதலின், அந் நீரைச் சுமந்துகொண்டு பெருகி வருவது வழக்கம். மாரிக் காலத்தில் நாட்டிடையே காடுகள் மிக்கிருந்தமையின் கொங்கு நாட்டிலும் மலை நாட்டிலும் பெய்த மழை நீரால் காவிரி நீர்ப்பெருக்குக் குன்றுவதில்லை. இதனால் காவிரியாறு ஆண்டு முழுவதும இடையறுப் பெருக்குடையதாயிற்று. சோழ நாடு முழுவதும் நீர்வளம் சிறந்தமையின் அந்நாடு புனல்நாடென்னும் புகழ்பெறுவதாயிற்று. வயல்களும் விளைத்த ஒன்று ஆயிரமாக விளையும் வீறுபெற்றன. பாடல் சான்ற புலவர் பெருமக்கள

"வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவறு வியன் கழனி"

என்றும், "பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்நாடு" என்றும் பாராட்டிப் பாடுவராயினர்.

தான் தோன்றிவரும் மலைநாட்டிலும் கொங்கு நாட்டிலும் நிலத்தை யகழ்ந்துகொண்டு பெருகிவரும் காவிரி நிலத்தடியே படர்ந்திருந்த பொற்கொடிகளை யறுத்துப் பொற்றாளை வரன்றிக்கொண்டுவந்து சோழநாட்டில் பொன்வளம் உண்டாகச் செய்தது. அதனால் காவிரிக்குப் பொன்னியென்ற சிறப்பும் புனல் நாட்டோடு பொன்னி நாடென்ற சிறப்பும் உண்டாயின.

காவிரி கடலொடு கலக்குமிடம் வாய் அகன்றும் ஆழ்ந்தும் இருந்தது கண்டான் கரிகாலன். தன் நாட்டுக்குத் தலைநகராய் விளங்கிய உறையூர் காவிரிக் கரையில் இருப்பதே யெனினும் அக்காவிரி கடலோடு கலக்குமிடத்தும் ஒரு நகரம் இருத்தல் வேண்டுமெனக் கருதினன். அவ்விடத்தே அவன் காலத்துக்கு முன்பே ஒரு பட்டினம் இருந்தது. அது காவிரிப் பட்டினமாக இருந்தது. கரிகாலனுடைய முன்னோர் கடலில் செல்லும் மரக் கலங்களில் வேறு நாடுகட்கு இனிது சென்று வாணிகஞ் செய்து போந்தனர். ஆண்டுதோறும் கடலில் வேண்டுந் திசை நோக்கி யடிக்கும் இயல்பு காற்றுக் குண்டெனவுணர்ந்து, அக்காற்றடிக்

கும் காலத்தில் கலங்களைச் செலுத்தினர். அதன் உண்மையை மேனாட்டான் ஒருவன் சோழர் கண்டறிந்த பல்லாண்டுகட்குப் பின்பு கண்டான். நெடுங்காலத்துக்கு முன்பே சோழர் கலஞ் செலுத்தும் துறையில் மேம்பட்டிருந்தனர். “நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழிலாண்ட உரவோன் மருக” என்று கரிகாலனை வெண்ணிக்குயத்தியார் என்பவர் பாடியிருக்கின்றார். இச் செயலுக்குக் காவிரிபபட்டினம் சிறப்புற்றிருந்தது. இது கண்ட கரிகாலன் காவிரிப்பட்டினத்தைக் காவிரிப்பூம் பட்டின மாக்கக் கருதினான். அதற்குரிய செயல முழுதும் செவ்வனே நடந்தன. சில ஆண்டுகளில அவன் விரும்பியவாறே காவிரிப் பூம் பட்டினம் பரத குமரரும் அரச குமரரும் நிறைந்த நகர மாயிற்று.

“ வேயா மாடமும் வியன்கல விருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கின் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும் ”

நகரவீதியும், காருகர் இருக்கையும், கூலவீதியும், கோவியல் வீதியும், கொடித்தேர் வீதியும், மறையோர் இருக்கையும், வணிகர் தெருக்களும், நாளங்காடிகளும், இளமரக்காக்களும் இலவந்திகைகளும், சதுக்கமும். சந்தியும், புதுப் பூஞ்சோலை களும் பிறவும் பெருகின.

இவ்வண்ணம் செல்வமும் புகழும் சிறக்கவோங்கிய கரிகா லன் பெயர் ஏனை வேந்தருள்ளத்தில் பொறாமைத் தீயை யெழுப் பிற்று. சில வேந்தர் ஒருங்கு கூடி ஒருகால் கரிகாற் சோழனை ஒரு சூழ்ச்சியாற் கைப்பற்றிச் சிறையிட்டனர். ஆயினும் கரி காலன் அவர் சூழ்ச்சிக் கெட்டாத நுண்ணிய சூழ்ச்சி செய்து சிறைக் கோட்டத்தினின்றும் தப்பி வெளிப்போந்து தன் நகர்க் குப் பண்டே போல் வேந்தனானான். அச் செயற்குச் சூழ்ச்சியும் துணையும் செய்த ஒளி நாட்டாரும், அருவாள நாட்டாரும், அவ னுடைய வலிக்கு ஆற்றாது பணிந்து ஒடுங்கி அவன் தொழில் கேட்டு நடக்கும் தொழும்பராயினர். பின்னர் வடவரும் குட வரும் தென்னரும் போந்து தீங்கு செய்ய முயன்றனர். ‘இவ ரெல்லாம் எலிகள்; தான் இவர்கட்கு நாகம்,’ எனக் கரிகாலன்

அவர்களைச் சீறினன். "உவரி யொலித்தக்கால் என்னும் எலிப் பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்" என்பது வாய்மொழி யன்றோ? வடவர் வாடினர்; குடவர் கூம்பினர்; தென்னவர் திறல் அழிந் தனர்.

இங்ஙனம் கரிகாலன் புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தே பெருமதிப்பை யுண்டுபண்ணிற்று. குடநாட்டுக் குறுநில மன்னர் சிலர் கரிகாலனுக்குத் தோற்றது கண்டான் சேரநாட்டு முடிமன்னனான சேரமான் பெருஞ் சேரலாதன். மனம் பொறாது கரிகாலனை எவ்வாற்றாலேனும் ஒடுக்க வேண்டு மென்ற எண்ணத்தனாய் வேளிர் பலரைத் துணை வேண்டினன். பதினொரு வேளிர் தலைவர் துணையாக வந்தனர். பெரும்படை திரண்டது; சோழநாடு நோக்கி வரத் தலைப்பட்டது. அதனை யறிந்தான் கரிகாலன். தனது படையை அதற்கெதிராக நடத்தினன். இருபடைகளும் வெண்ணி யென்னும் இடத்தே நேர் நின்று பொருதன. பதினொரு வேளிரும் தோற்றோடினர்; அவரது பெரும்படை உடைந்து போயிற்று. சேரலாதன் வேளிரை நம்பி வீறழிந்து போனன். புறப்புண்ணுற்று வீழ்ந்த பெருஞ் சேரலாதன், பெரு மானமும் உயர் நாணமும் கொண்டவனாய் அப் போர்க்களத்தே வாள் வடக்கிருந்து உயிர் துறக்கலுற்றான். இதனைக் கழாத் தலையார் என்னும் சான்றோர்,

> " தன்போல் வேந்தன் முன்பு குறித் தெறிந்த
> புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்,
> வாள் வடக்கி ருந்தனன்."

என்று குறிக்கின்றார். வேளிர் பதினொருவரும் மாய்ந்தனர்; சேரலாதன் வடக்கிருந் தொழிந்தான். எஞ்சிநின்ற பாண்டியனையும் களைந்தொழிக்கக் கருதினன் கரிகாலன்; திரண்ட படையொன்று கொண்டு பாண்டி நாட்டின்மேற் சென்று பாண்டியனை வென்றான். அங்கு அவர்க்குத் துணை செய்த இருங்கோ வேளும் கரிகாலனுக்காற்றாது சாய்ந்தொழிந்தான். பாண்டி நாட்டு வெற்றியைப் பாராட்டிப் பாடிய கருங்குளவாதனா ரென்ற புலவருக்குப் பொன்னும் பொருளும் கரிகாற் சோழ நல்லூரென்ற தன் பெயரால் அக் கருங்குளமென்னும் ஊரும் நல்கினன். பின்பு தன்னோடு திரும்பிய கரிகாலனைப் பற்றிப் பட்டினப் பாலை யென்னும் பாட்டொன்றைக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரென்ற சான்றோர் பாடிச் சிறப்பித்தார். அவருக்

குக் கரிகாலன் பதினுறு நூருயிரம் பொன் கொடுத்தான். பின்னர், கரிகாலன் இமயம் வரையில் தன் வெற்றி நலத்தை விளக்கினுன்.

5. ஐக்கிய நாடுகளின் கழகம்

திரு. ப. முருகன், எம். ஏ.,

'யாதும் ஊரே; யாவருங் கேளிர்' என அன்று பழந்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனுர் உலகமே ஒரு குடும்பமாகப் பாராட்டிப் பாடினுர். எத்துணை ஆழ்ந்த கருத்தினைப் புலவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்! இத்திறனை நினைக்க நினைக்க நாம் மிக இன்புறுகின்ருேம். எனினும் இந்நாளில் நாம் உலக ஒற்றுமையைக் காண்கிருேமா? இல்லையே! எங்கும் வேற்றுமையுணர்ச்சியும் பூசலுமன்ருே காணப்படுகின்றன? வலிய நாடுகள் எளிய நாட்டை விழுங்கப் பார்க்கின்றன. அதனுல் நாடுகளிடையே பகையுணர்ச்சி பரவிப் போர் மூளும். போரின் விளைவால் பொதுமக்களும் துன்புறுவர். இங்ஙனம் நம் தலைமுறையில் உலகை நடுங்க வைக்கும் இரு பெரும் நிகழ்ச்சிகளைக் கண்டோம். அவை இரு உலகப் பெரும் போர்கள். குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் மக்கள் பெற்ற துன்பத்துக்கு அளவில்லை. இரண்டாம் பெரும் போருக்குப் பின் ஜெர்மனியை எதிர்த்த நேசநாட்டுப் பிரதிநிதிகள் 1945-இல் அமெரிக்காவில் உள்ள ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஒரு மாநாடு கூட்டினர். இனி உலகில் போர் ஏற்படாமல் இருப்பதற்கும் அமைதி நிலவுவதற்கும் திட்டங்கள் வகுத்தனர். அம்மாநாட்டின் பயனுகவே 'ஐக்கிய நாடுகளின் கழகம்' ஏற்படுத்தப்பட்டது. உலகில் வாழும் அவரவர் உரிமைக்கும் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் ஆவன புரிய அன்று கூடிய ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து ஐக்கிய நாடுகளின் கழகச் சாசனத்தில் கையெழுத்திட்டனர்.

இக் கழகத்தின் நோக்கங்கள் நான்கு. அவை :

1. எல்லா நாடுகளின் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்டுதல். அமைதியைக் குலைக்கும் முயற்சிகளை அடக்கி நாடுகளிடையே ஏற்படும் பிணக்குகளை நேரிய நெறியில் தீர்த்து வைத்தல்.

2. உலக மக்களின் உரிமையை மதித்து நாடுகளுக்கிடையே நட்பை ஏற்படுத்துதல்.

3. மொழி வேற்றுமை, சமய வேற்றுமையின்றி எல்லா நாட்டினருக்கும் பொருளாதாரம், கலாசாரம், பரோபகாரம் பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அவ்வந் நாடுகளின் ஒத்துழைப்பையும் ஈட்டுதல்.

4. மேற்கூறிய பொதுக் கொள்கைகளுக்கென அவ்வந் நாடுகள் புரியும் செயல்களை ஒருமுகப்படுத்தி வைக்கும் மத்திய சங்கமாக ஐக்கிய நாடுகளின் கழகத்தை நடத்துதல்.

இன்று இக்கழகம் அறுபது உறுப்பினர்கள் அடங்கியதாகும். இக்கழகத்தில் எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் கூடிப் பேசுவர். இதில் இவ்வறுபது நாடுகளைச் சேர்ந்த 4,000 அலுவலாளர்கள்வேலைசெய்கின்றனர்.அரசியல்,உலகஅமைதி, பொருளாதாரம், கலை, அஞ்சல் என்னும் துறைகளை விருத்தி செய்யத் தனித்தனி உட்குழுக்கள் உண்டு. பொருளாதாரக் குழுவின் கீழ்க் கைத்தொழில், உணவு, பயிர்த்தொழில்,கல்வி, வரலாறு, சுகாதாரம் இவற்றின்வளர்ச்சியைக்குறிக்கும் நிலையங்களும் உண்டு. ஐக்கிய நாடுகளின்கழகத்தில் பாதுகாப்புச்சபை என்னும் பிரிவு ஒன்று உண்டு. இச்சபையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனு என்னும் ஐந்து வல்லரசுகளுக்கும் என்ஞான்றும் நிலையான உறுப்பினராக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இரண்டாண்டுகளுக்கு ஒருகால் இக் கழகத்துக்கு வேறு ஆறு நாடுகளைப் பொதுச்சபை தேர்ந்தெடுக்கும். இப் பாதுகாப்புச் சபையின் கிளையாக ஹேக் நகரில் ஒரு பெரிய நீதி மன்றம் இருக்கின்றது. இஃது ஒரு சிறந்த மன்றமாகும். ஐ. நா. வின் அலுவலகங்கள் நியூயார்க்கின் கீழ்த்திசையில்அமைந்திருக்கின்றன. எனினும் இவ்விடம் அமெரிக்க அரசியலாருக்கு உட்பட்ட தன்று. ஐ. நா. கழகத்துக்கே உரியதாகும்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில்ஏற்படும்சிக்கல்களையெல்லாம் தீர்ப்பதெனின் அஃது எத்துணை அரிய செயல்! இச்செயற்கரிய செயலை ஐ. நா. பெருங்கழகம் மேற்கொண்டு பணியாற்றி வருகின்றது. இக்கழகம் துவங்கிய சில ஆண்டுகளிலேயே பல வியத்தகு செயல்களைப் புரிந்துள்ளது. இந்தோனேஷியாவில் அந்நாட்டுக் குடிகட்கும், டச்சுக்காரருக்கும் நடந்த போராட்டம், பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாட்டுக்கும் அரபுநாட்டுககும் நடந்த போராட்டம், காஷ்மீரில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும்

நடந்த போராட்டம், கொரியப் போராட்டம் முதலிய நிகழ்ச்சி களில் ஐ நா. தலையிட்டுத் தகுந்த நடவடிக்கைகளின் மூலம் எதிரிகளின் ஆக்கிரமிப்பைத் தடுத்துள்ளது. அதனால் குறிப் பிட்ட இடங்களில் நேரும் போரின் துன்பம் மிகாதவாறு காத்தது.

ஐ. நா. கழகம் புரிந்துவரும் சமூகசேவை மிகவும் பாராட்டு தற்குரியது. நிறவேற்றுமை, இனவேற்றுமை கருதாமல் எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும் உதவும் நிதிக்குழு ஒன்றும் நிறுவப் பட்டுள்ளது. இந்நிதிக்கு ஐ. நா. வின் உறுப்புகளாக விளங்கும் நாடுகள் மனமுவந்து நன்கொடை அளிக்கின்றன. இந்நிதி யினின்றும் உலகில் உள்ள ஐ. நா. வைச்சேர்ந்த நாடுகளின் ஏழைச் சிறுவர் சிறுமியர் ஊணும், உடையும், மருத்துவ உதவி யும் பெறுகின்றனர். அமெரிக்க அரசியலார் இத்துறையில் புரியும் பெரும் நன்கொடை குறிப்பிடத் தக்கது. ஏனை நாடு களினின்று வரும் ஒவ்வொரு டாலருக்கும் அவர்கள் 2·57 டாலர் வீதம் பொருளுதவி புரிகின்றனரெனின் அவர்தம் கருணை உள்ளம் பாராட்டற்குரியதன்றோ? போர்க்காலத்தில் துன்புற்ற மக்களுக்கும் இக்கழகம் அகதிகளின் இயக்கம் என ஒரு குழுவை நிறுவி உதவி புரிகின்றது.

ஐ. நா. கழகத்தின் சார்பில் நடக்கும் சுகாதார இயக்கம் உலகில் மக்களுக்கு ஏற்படும் பல்வகை நோய்களை நாடி, நோய் முதல் நாடி, அதைத் தணிக்கும் முறைகளை மிகத் தேர்ந்த மருத் துவர்களைக் கொண்டு ஆய்ந்து ஆவன செய்கின்றது. அதன்பய னாகப் பல ஆரோக்கியத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்கள் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படு வது உணவேயன்றோ? உணவுப் பஞ்சத்தைப் போக்கும் முறைகளை ஐ. நா. வின் பயிர்த்தொழிற் குழு கவனிக்கும். இக் குழுவின் உறுப்பினர் அவ்வந் நாடுகட்கும் சென்று தக்க ஆய்வு களினால் உணவுப் பெருக்கத்துக்குரிய முறைகளைக் கண்டுள்ள னர். இக் குழுவில் கீழ்க்கோடி நாடுகள் பெரும் பங்கு கொண்டு உழைக்கின்றன.

பிற்போக்குள்ள நாடுகளில் தொழில் வளர்ச்சி குறித்தும் ஐ. நா. கழகம் அரும்பணியாற்றுகின்றது. தொழில் நுட்பக் கலை யறிவைப் பொதுவகைப்படுத்தி உயரிய திட்டங்களை வகுத்துத்தொழிற்றுறையில்பிற்போக்கான நாடுகளுக்கு வழங்கி உதவி புரிந்து வருகிறது. உலகம் முழுமையும் கல்வியறிவைப்

பெருக்குவதற்கும் ஐ. நா. கழகம் சிறந்த பணியாற்றுகின்றது. இந்தியா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா இவற்றின் அரசியலார் வகுத்துள்ள கல்வித் திட்டங்களைப் பரப்ப ஐ. நா. கழகம் உறு துணை புரிகிறது. விஞ்ஞானக் கல்வி உலகம் முழுமைக்கும் பரவுவதற்கும் ஐ. நா. கழகம் உதவுகின்றது. பொருளாதாரத் தில் பிற்போக்குடைய நாடுகள் இக்கழகத்தின் கிளையாகிய சர்வ தேச நிதிக் குழுவிலிருந்து கடன் பெற்றுத் தங்கள் நாட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றன. மேலும் இக் கழகம் தனி மனிதரின் உரிமை, தொழிலாளர் முன்னேற்றம் இவற்றை உயர்த்த உலகமுழுமைக்கும் அடிப்படைக் கொள்கை வகுத்து நற்பணி யாற்றுகின்றது. உரிமையற்றிருக்கும் நாடு களும் துன்பம் அடையா வண்ணம் விழிப்புடன் கவனித்து வரு கின்றது. ஒரு நாட்டின்மீது பிற நாட்டினர் நேர்மையின்றிச் செய்யும் தாக்குதல்களை நிறுத்த உடனடியான நடவடிக்கைகளை இக் கழகம் மேற்கொள்ளும்.

இங்ஙனம் உலக அமைதியே இலட்சியமாகக் கருதி உலகத்தை ஒரு குடும்பமாகப் பாராட்டி மக்களுக்குள் சமரச நோக்கும், சகோதரத்துவமும் வளர்க்கும் இப்பெருங்கழகத்தை உலக மக்கள் அனைவரும் தம் சொந்த இயக்கமாகக் கருதி ஆதரிக்க வேண்டும். ஒவ்வோராண்டும் அக்டோபர் திங்கள் 21-ஆம் நாளில் ஐ. நா. தினம் உலகமெங்கும் கொண்டாடப்படு கின்றது. அந்நாள் உலக மக்கள் அனைவரும் போற்றும் பொன் னுள் என்றே கருதவேண்டும். ஐ. நா. பெருங்கழகம் பல துறை களிலும் வெற்றிபெற்று மிளிர்ந்து உலகமக்கள் நலமுற வாழ்வார்களாக.

6. பழந்தமிழ் உரைநடை

I. இறையனாரகப் பொருளுரை

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசிகடுகுதலும் அரசன் சிட்டரை யெல் லாங் கூவி, 'வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்' என்றான். என

அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழை பெய்தது. பெய்தபின், அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்ன? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப; மதுரை ஆலவாயின் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம் என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

2. புறநானூற்று உரை

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானுழைச் சென்ற பிசிராந்தையாரைக், "கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ?" என்ற சான்றோர்க்கு அவர் சொற்றது:—

'நுமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படியாயினீரெனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர்; யான் கருதிய அதனையே கருதுவர் என்னுடைய ஏவல் செய்வாரும்; அரசனும் முறையல்லாதன செய்யானுய்க் காக்கும்; அதற்குமேலே யான் இருக்கின்ற ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர் பலராதலான்!

(புறம் 191 உரை)

3. அடியார்க்கு நல்லாருரை

நாம் திங்களைப் போற்றுவேம்; திங்களைப் போற்றுவேம்: அஃது எற்றுக்கெனின், தாது பரத்தல்செய்த மாலையையுடைய சென்னியுடைய குளிர்ச்சியையுடைய வெண்குடை போன்று பொதுவற இவ்வுலகிற்கு அளிசெய்தலா னென்க.

நாம் ஞாயிற்றைப் பேர்ற்றுவேம் : ஞாயிற்றைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், காவிரி நாட்டையுடையவனுடைய ஆழி போலப் பொலிவுபெற்ற கொடுமுடியையுடைய மேருவை வலமாகத் திரிதருலா னென்க.

நாம் பெரிய மழையைப் போற்றுவேம்; பெரிய மழையைப் போற்றுவேம்; அஃது எற்றுக்கெனின், அச்சத்தைத் தரும் கடல் சூழுலகிற்கு அவன் அளிசெய்யுமாறுபோல மாருது மேலாய் நின்று தன் பெயலான் வளத்தைச் சுரத்தலா னென்க.

நாம் புகாரைப் போற்றுவேம்: புகாரைப் போற்றுவேம்; அஃது எற்றுகெனின், மிக்க கடலை வேலியாகவுடைய உலகின் கண் அவன் குலம்புகழ்வார் இதனையும் புகழ்வாராகலினென்க.

— சிலப்பதிகாரம்

4. பரிமேலழகர் உரை

கடவுள் வாழ்த்து

அஃதாவது கவி தான்வழிபடு கடவுளையாதல் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல், அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளையென வறிக. என்னை? சத்துவமுதலிய குணங்களான் மூன்ருகிய உறுதிப் பொருட்கு அவற்ருன் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான், அம்மூன்று பொருளையுங் கூறலுற்ருர்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அது போல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து.

— திருக்குறள்

சிறப்பு

1. மணிமேகலை

ஆதிரை பிச்சையிட்ட காதை

நம் செந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று மணிமேகலையாகும். இதனை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் ஆவர். அவர் சங்க மருவிய புலவர். கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர். இவர் கூலவாணிகம் செய்து வந்தமையினால் இப் பெயர் பெற்றார் என்பர். இவரைச் சீத்தலைச் சாத்தனார் என்றும் கூறுவர். பிறர் நூல்களில் காணுங் குற்றத்திற்காக இவர் தம் தலையில் குத்திக்கொள்வாராம்; அதனால் இவர் தலை சீத்தலையாயிற்றாம். இவரும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் சம காலத்தவர். கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்தவள் மணிமேகலை எனும் பொற்புடைச் செல்வி. இவளுடைய துறவுபற்றிக் கூறுவதே 'மணிமேகலை' எனும் காப்பியமாகும். இந் நூலுக்கு 'மணிமேகலை துறவு' என்ற வேறொரு பெயரும் உண்டு. முப்பது காதைகளைக் கொண்டது. இந் நூலில் பௌத்தமதக் கொள்கைகளைப் பரக்கக் காணலாம்.

1. மன்னுயிர் - நிலைபெற்ற உயிர். கோறல் - கொல்லுதல். 3 - 4 இவ்வடிகளில் உள்ள கருத்து 'உறங்குவது போலும் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு' எனும் திருக்குறளைத் தழுவி வந்துள்ளமை காண்க. 6. அல்லறம் - அறமல்லாதனவற்றை, தீய காரியங்களை. 7. உரவோர் - சான்றோர். களைந்தனர் - நீக்கினர். 8. கடு நகை - மிக்க சிரிப்பு. 11. எவ்வணம் - எங்ஙனம். 12. செவ்வனம் - செம்மையாக. 15. தடிந்து - வெட்டி. 20. சேண் - தொலைவு. 21. செய்வினை - செய்த பழவினைக் கேற்ப. 22. யாக்கை - உடம்பு. 23. எரி - நெருப்பு. சாதுவனுடைய கண்கள் எல்லாம் கள்ளுண்டு சிவந்திருந்தன. 24. சாதுவனுக்குச் செட்டி என்பது பட்டப் பெயர். 26. ஊன் - மாமிசம் 30. ஒல்லும் - இயலும். 32. அடு தொழில் - கொல்லுந் தொழில். 33. மூத்துவிளி - முதுமையுற்றுத் தாமாக இறந்துபடும். மா - விலங்கு. விரைமரம் - மணம் வீசும் மரம், அதாவது சந்தன மரம். 34. தீத்திறம் - இங்கே கொலையைக் குறிக்கும். 39. விழு - சிறந்த. நிதிக்குப்பை - பொருட் குவை. 42. வங்கம் - கப்பல். 68. புனையா ஓவியம் - அணி செய்யப்படாத ஓவியப் பாவைபோல். 'வண்ணங்கொண்டு எழுதாத வடிவைக் கோட்டின ஓவியம்.' துறவறத்தினர் பிச்சை யேற்குங்கால மோனமாக நிற்றல் வேண்டும் என்பர். அதனால் 'புனையா ஓவியம்போல' என்று கூறினார்.

2. கம்பராமாயணம்

குகப் படலம்

வால்மீகி முனிவர் வடமொழியி லியற்றியருளிய இராமாயணக் கதைப் பகுதியினைத் தமிழ் நாட்டின் மொழி, கலையுணர்வுக் கேற்பக் கம்பர் விருத்தம் எனும் ஒண்பாவினால் சிறந்ததொரு பெருங் காவியமாகச் செய்துள்ளார். கம்ப ருடைய வாழ்க்கை வரலாறு நன்றாகத் தெரியவில்லை. இவர் சோழவள நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் என்பாருக்கு மகனாகத் தோன்றினார். சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டுப் பின்னர்ச் சோழன் அரசவைப் புலவராக விளங்கினார். இராமன் கதையினைத் தீந்தமிழில் இனிய நடையில் பொருட்சுவை, சொற்சுவை பொருந்த, ஆற்றொழுக்காய்ப் படித்துப் பொருளுணர்ந்து மகிழும் வகையில் பாடியருளினார். கம்பர் பெரும் புலவராக விளங்கினார். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்ப நாடன் கவிதையில் போற் கற்றோர்க் கிதயங் களியாதே' என்பனவும், 'விருத்த மென்னும் ஒண்பாவிற் குயர் கம்பன்' என்னும் செய்யுளடியும் இவர் தம் புலமையின் மாட்சிமையினையும், இவர்பால் நம்மனோர்க்கிருந்த பற்றுதலையும் விளக்கிக் காட்டுவன. சிலர், இவர் கி. பி 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பர்; வேறு சிலர் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார் என்பர். ஒட்டக்கூத்தர் இவர் காலத்தவர்.

கம்பர் என்னும் பெயர் குலம் பற்றி வந்ததென்றும், நாடு பற்றி வந்ததென்றும், இவர் குழந்தையில் திருவழுந்தூர்க் கொடிக் கம்பத்தின் கீழ்க் கிடந்ததால் வந்தது என்றும், கம்பர் என்பது இயற்பெயரே எனவும் பல வகையான காரணங்கள் கூறப்படுகின்றன. இவர் சரசுவதியந்தாதி, ஏரேழுபது, சடகோபரந்தாதி முதலிய பிற நூல்களையும் இயற்றியுள்ளார்.

இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளைக் கொண்டது.

நம் பாடப்பகுதி அயோத்தியா காண்டத்தில் உள்ளது. குகப் படலத்தில் இராமனைக் காட்டினின்று மீட்டுக் கொண்டு வருமாறு சென்ற பரதன் குகனைக் கண்டு கங்கையைக் கடந்து சென்ற செய்தி கூறப்படுகின்றது.

1. பூவிரி - அழகு மிக்க. பொலன் கழல் - பொன்னாலாகிய வீரக் கழல். பொருவு இல் - ஒப்பு இல்லாத. தானை - சேனை. கழனி நாடு - கோசல நாடு. தமது நாடாகிய காவிரி நாட்டைக் கோசல நாட்டிற்கு உவமையாகக் குறிப்பிடுவதால் கம்பரின் நாட்டுப் பற்று விளங்கும். தாவர சங்கமம் - நிலை இயல் இயங்கியற் பொருள்கள். 2. ஆயிடை - அச்சமயத்தில். துப்பு - வலிமை. உடற்ற - போர் செய்ய. 3. 'எலிப்பகை நாகம் உயிர்ப்பக்கெடும்' என்னும் திருக்குறட் கருத்து இப்பாட்டிற் சொறிந்துள்ளது. ஒலியுலாம் - ஆரவாரம் மிகுந்த. வள் உகிர் - கூரிய நகம். 4. புளிஞர் - வேடர். உம்பர் - விண்ணுலகம். ஏன்றனென் - மேற் கொண்டுள்ளேன். அமைதிர் - சம்மதிப்பீர்களாக. 5. அஞ்சன வண்ணன் - மைபோன்ற கரிய நிறத்தை யுடையவன். நாயகன் - தலைவன், இராமன்.

உஞ்சு - உயிர் பிழைத்து. சரம் - அம்பு. 6. திரை - அலை. வேழம் - யானை. ஏழமை-சொன்ன சொல்லைக் காப்பாற்ருது போதலால் வரும் புன்மை. 7. மொய் புலி - வலிமையுள்ள புலி. வாயாவோ - தைத்துப் பொருந்தாமல் போகுமோ. 8. சாடி - மோதியழித்து. வேடு - வேடர்கள். மேவீரோ - அடைய மாட்டீர் களா. 9. கோ - தலைவன், இராமன். ஏ - அம்பு. சிறு கூழ் - சிறிய பயிர். மனத்து இறை கொள்ளாதே - மனத்தில் சிறிதேனும் நினையாமல். 10. வன்பணை - வலியதாகிய பெரிய. முன்பனில் - வலிமையுடைய பரதனிடத்தில். மூரிய- வலிமையுடைய. தேர் வல்லான் - தேரைச் செலுத்த வல்ல சுமந்திரன். 11. நாவாய் - படகு. வெங்கரியின் ஏறு அனையான் - மதம் செறிந்த யானைகளுள் தலைமை பூண்ட ஆண் யானை போன்றவன். 12. கல் காணும் - கல்லை யொத்த. கரை காணு - எல்லை காணுத. காதலான் - அன்பினையுடையவன். அல் இருள், மழை காணும் - மேகத்தைப் போன்ற. நெறியெதிர் - வழி எதிரில். 13. வற்கலை- மரவுரி. கல் கனியக் கனிகின்ற - கல்லும் கரைந்துருகுமாறு இளகிய. மாசு - அழுக்கு. மதி - சந்திரன். நின்ளுெழிந்தான் - செயலற்று நின்ருன். 14. நம்பி - ஆடவருள் சிறந்தவன். 15. வந்து எதிரே தொழுதானை - வந்து நேரே தொழுத குகனை. மலர் இருந்த அந்தணன் - பிரமன். தகவு - தகுதி. சீர்த்தியான் - மிக்க புகழுடைய பரதன். 16. எழு - கணைய மரம். முந்தையோர் முறை - முன்னோர் களின் முறை, மூத்த மகனுக்கே அரசு அளித்து வந்த முறைமை. வழுவினன் - தவறிவிட்டான். 17. தாதை - தந்தை. தாயுரை கொண்டு - கைகேயி சொன்ன சொல் கொண்டு. 18. ஏழை - அறிவில்லாதவனுகிய. எயினன் - வேடன். இரவி - சூரியன். கற்றை-தொகுதி, உரவு - வலிமை. 19. கார்-மேகம். கடிது-விரைந்து. பருவரல் பரவை - துயரமாகிய கடல். 20. இயன்றது - இதுவரையிலும் நிகழ்ந் தது. அயின்றனை - உண்டாய். குயின்று - பதித்து. அரிய புல் - தர்ப்பைப் புல். சுடருங்காசு - ஒளிவிடும் மணிகள். 21. தூண்தர - தூணை ஒப்ப. நிவந்த - உயர்ந்த. சூழல் - இடம். நிமிர்ந்த நேயம் - மிக்க அன்பு. 22. அல்லை ஆண்டு- இருளைப்போன்ற. கங்குல் எல்லை - இரவின் எல்லை. நயனம் - கண். 23. அன்பத் துக்கு - அன்புக்கு. ஒத்த தோற்றத்தேயில் - ஒத்த பிறப்பினையுடைய எங்களில். 24. பொடி - புழுதி. தெவ் - பகைவர். இடை தர - பின்னிடும்படி. குரிசில் - பரதன். ஏவலால் - கட்டளையால். குரகதம் - குதிரை. தேர்வலான் - சுமந் திரன். கரி - யானை. பரி - குதிரை. எரிமணி - சுடர்விடும் இரத்தினங்கள். மரபுளி - முறையினுல். 'உளி' என்பது மூன்ரும் வேற்றுமைச் சொல்லுருபு.

3. பல்வகைப் பாடல்கள்

1. சீட்டுக் கவி

பண்டைக்காலத்தில் புலவர்கள் தமக்கு வேண்டும் பொருள்களை வள்ளல்களிடம் கவிதையாக எழுதித் தெரிவிப்பது உண்டு. இக்கவிதைக்குச் சீட்டுக்கவி என்று பெயர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் சைவ வேளாளர்; தொண்டை நாட்டில் உள்ள பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தவர்.

விரகன் - வல்லவன். பரியந்தம் வரையில். திரிபதகை - கங்கை. செழியன் - பாண்டியன். குதிரையைக் குறிக்கும் பல சொற்களை இச்செய்யுளிற் காணலாம்.

2. நாய்க்கும் தேங்காய்க்கும் சிலேடை

ஒருசொல் அல்லது தொடர் இரு பொருள்படப் பாடுவது சிலேடையாகும். பின்வரும் மூன்று பாடல்களையும் இயற்றியவர் காளமேகப்புலவர்.

குலைதனக்கு - குரைப்பதற்கு, குலைகள் காய்ப்பதற்கு. செப்பு-சொல்.

3. பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை

நஞ்சு - விஷம், நைந்து. நாதர்-சிவபெருமான். வெம் சினம் - மிக்க சினம். விஞ்சுதல் - மிகுதல்.

4. வறுமையின் கொடுமை

கலை - ஆடை. உதரம் - வயிறு. நிருதி - அரக்கன். அந்தமாம் - குருடாகிய. அனிலம் - காற்று. கோப்பயன் உதவும்-கோப்பயன் என்பவன் பெற்றெடுத்த. விதரணராமன் - அறத்தினால் எல்லோரையும் இன்பமடையச் செய்பவன்.

5. எழுத்துப் பெருக்கம்

சோலையைக் குறிக்கும் ஓரெழுத்து கா. தொக்கு - சேர்ந்து. நீலம் - காவி. சென்னி - சோழன். கடை சேர்ந்த ஓரெழுத்து வி.

6. எழுத்துச் சுருக்கம்

ஆற்றின் பெயர் - பாலாறு. பால் ஆ - பாலைத் தரும் பசு. உண்பயன் பால், ஈறு ஒழிந்தால் பா; பா - செய்யுள்.

7. நற்பண்புகள்

பண்புளருக்கு ஓர் பறவை (ஈ). இலக்கம் (எட்டு). நாற்காலி - விலங்கு. அரவம் - பணி. வாகனம் - விடை. நன்னிலம் - செய். நல்லவருக்குக் கொடு; பாவத்தினின்று எட்டிச்செல்; பகைவருக்கு விலகு ; சொக்காதருக்குப் பணி விடை செய்.

8. புதுமைப் பெண்

பாரதியார் வரலாறு முன்னரே கூறப்பட்
அவலம் - துன்பம்.

9. வாழ்த்து

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை திருவிதாங்கூரைச் சார்ந்த தேரூர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் எளிய இனிய புதுமைக் கவிதைகள் புனைவதில் திறமை மிக்கவர். இவர் நாகர்கோயில் என்னும் ஊரில் வசித்தவர். இவருடைய ஆசிய ஜோதி, மலரும் மாலையும் என்னும் நூல்கள் படிக்கப் படிக்க இனிக்கும் தன்மை உடையவை.

பருவ மழை - குறித்த காலத்திற் பெய்யும் மழை.